# தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதியுதவியுடன்
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை**
மற்றும்
**முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்**
இணைந்து நடத்தும்

## இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம்

தொகுதி - II

**UGC sponsored two day National Seminar on**
**HUMAN RIGHTS IN TAMIL LITERATURE**



பதிப்பாசிரியர்
**முனைவர் க. முருகேசன்**

157. *Dr. T. Muraleeswari* 712
Atrocities of Bonded Labour System Portrayed in Mahasweta Devi's Select Short Stories

158. *கி. சுப்பிரமணியன்* 718
கோவூர் கிழார் பாடல்களில் மனித உரிமைக் குறிப்புகள்

159. *அ. ராஜி* 722
இலக்கியங்களில் மனித உரிமைகள்: ஒரு பருந்துப் பார்வை

160. *சு. மலர்விழி* 726
ஆண்டாள் பிரியதர்சினியின் கவிதைகளில் மனித உரிமைகள்: திருநங்கையரை முன்னிறுத்தி ஒரு தேடல்

161. *முனைவர் வெ. சுகந்தா* 731
தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைகள்

162. *முனைவர் பா.வேலம்மாள்* 734
தமிழ் இலக்கியங்களில் பெண்ணுரிமை சிந்தனைகள் (கவிதைகளை முன்வைத்து)

163. *முனைவர் மொ. இரவிக்குமார்* 739
தமிழ்க் கவிதைகளில் காணலாகும் மனித உரிமைகள்

164. *முனைவர் இரா. மணிமேகலை* 744
ஐவகை மன்றத்து அமைதி

165. *முனைவர் க. முருகேசன்* 749
வைரமுத்துவின் படைப்பில் மனித உரிமைப் பதிவுகள்

166. *ஆ. நித்யா* 756
சுஜாதாவின் மனித உரிமைப்பற்றிய சமூகப்பார்வை

167. *ம. விவேக் பிரபு* 760
வைரமுத்துவின் திரைப்பாடல்களில் பெண்களின் உரிமைக் குரல்

168. *முனைவர் க. பழனிவேல்* 765
புரட்சிக்கவியில் மனித உரிமைச் சிந்தனைகள்

169. *இரா. அபிமன்யு* 769
மாத்திரை சிறுகதையில் பெண்ணுரிமை

170. *முனைவர் சு. சதீஷ்குமார்* 774
சூதுபோர்ச் சருக்கத்தில் மனிதஉரிமை மீறல்கள்

171. *ச. மல்லிகா* 779
பிரபஞ்சனின் சிறுகதைகளில் பெண்ணுரிமை

172. *மு. ஜெயலட்சுமி* 784
அகநானூறு காட்டும் பெண்ணுரிமை

173. *முனைவர் ந. இரஞ்சன்* 791
தமிழ் மண்ணின் உரிமை காப்போம்

174. *முனைவர் கு. முத்துக்குமார்* 795
இலக்கியப் படைப்பாளிக்கெதிரான உரிமை மீறல்

# 164. ஐவகை மன்றத்து அமைதி

முனைவர் இரா. மணிமேகலை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோவை - 641 029.

## முன்னுரை

*"பதியெழு அறியாப் பழங்குடி கெழீஇய*
*பொதுவறு சிறப்பில் புகார்" (சிலப்பதிகாரம் 1:15-16)*

என்று புலம்பெயராத பழங்குடி மக்களைத் தன்னகத்தே கொண்ட புகார் நகரம் சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப் பெறுகின்றது. தமிழக வரலாற்றில் தமிழர் பண்பாடு உச்சம் பெற்ற காலத்தில் சோழர்களின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது புகார் நகரம். அதனால் தான்

***"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்***
***விளங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு***
***ஓங்கிப் பரந்து ஒழுகலான்"***

என்று இளங்கோவடிகள் போற்றுகின்றார். தொன்மை மிகுந்த இந்நகரைப் புகார், பூம்புகார், மூதூர், பெருநகர், பட்டினம், காவிரிப்படப்பை நன்னகர், கவேரபட்டினம், காகந்தி என்று பல பெயர்களில் வழங்கி வந்துள்ளமை இலக்கியங்களின் வழியாக அறியலாகின்றது. சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, புறநானூறு, மணிமேகலை, பொருநராற்றுப்படை, பிளினியின் குறிப்புகள், தாலமி என்ற நிலநூல் ஆசிரியர் எழுதிய குறிப்புகள் ஆகியவற்றில் புகாரினைக் குறித்த பல்வேறு செய்திகள் இடம் பெறுகின்றன.

காடுகொன்று நாடாக்கியும் குளந்தொட்டு வளம் பெருக்கியும் வேளாண்மைக்குரிய நாடாக சோழநாட்டை கரிகாலன் உருவாக்கினான். சோழநாட்டு அரசாட்சியின் தலைநகராக உறையூரே விளங்கினாலும் காவிரிப்பூம்பட்டினம் எனப்படும் புகார் நகரினையே வாணிபத் தலைநகராகக் கருதி வளம் பெருக்கினான் எனலாம். அதனால்தான் தாலமி தன் குறிப்புநூலில் புகார் நகரை உலகச்சந்தை என்ற பொருளில் "EMPORIUM" என்று கூறிச் சென்றுள்ளார் என்பர். அதற்குச் சான்றாதாரம் சிலப்பதிகாரம் இந்திர விழவு ஊர் எடுத்த காதை கூறுகின்ற செய்திகளை ஆய்ந்து நோக்கும் போது புலனாகின்றது.

## புகார்நகரக் காவல்பூதம்

இத்துணை சிறப்பு வாய்ந்த பூம்புகாரைத் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற சோழ மன்னன் ஆட்சி புரிந்தான். அகத்தியமுனிவரின் ஆலோசனையின் படி எதிர்காலத்தில் புகார் நகரம்